# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


வருகிறது!

மறைக்கல்வித் தினமும்
கிறிஸ்தவ திருமறைக் கல்விச் சபையின்
திருவிழாவும் — 6-6-1971


96-ம் புத். | 1971-ம் ஆண்டு ஆனி மாதம் 5-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 19-ம் இல


# ஜனநாயகத்துக்குப் புது மெருகு அளியுங்கள்

## — பரிசுத்த தந்தை

பரிசுத்ததந்தை 13-வது சிங்கராய பாப்பரச "றேறும் நவாறும்" என்னும் பெயருடன் முதன் முதல் சமூக நீதி பற்றி வரைந்த உலக நிருபத்தைப் பற்றிக் கேட்டிராதார் இல்லையெனக் கூறுதல் மிகையாகாது. அது வரையப்பட்டு 80 ஆண்டுகள் நிறைவான சென்ற மாதம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் உலக பொது நிலைமக்களுக்கு ஒரு கடிதம் வரைந்திருக்கின்றார். இக்கடிதம் உலக பொது நிலை மக்களின் விவகாரத்தை வத்திக்கானில் கவனித்துவரும் காரியாலய அதிபர் கருதினல் றோய் அடிகளார் மூலம் அனுப்பப்பட்டிருக்கின்றது. அக்கடிதத்தில் முக்கியமாகக் கூறப்பட்டிருப்பது பின்வருவனவே.

● உலக கத்தோலிக்க மக்கள் ஜனநாயக ஆட்சி முறையில் கிறிஸ்தவ பண்பாடுகளை உட்செலுத்தி அதைச் சகல மக்களதும் விசேஷமாய் வறியமக்களது முன்னேற்றத்துக்கு உகந்ததாகப் புதிய மெருகுவென விளங்கச் செய்ய வேண்டும்.

● பரிசுத்த தந்தை இக்கடிதத்தில் மார்க்சிய வாதத்துக்கும் கத்தோலிக்க விசுவாசத்துக்குமுள்ள முரண்பாடுகளை விளக்கியிருக்கின்றார்.

● சோஷலிசம்எனக் கூறப்படுகின்ற சமதர்ம கொள்கை மிகைபடத் தீவிரத்தன்மை அடையுமாயின் அதிலுள்ள ஆபத்துக்களும் அக்கடிதத்தில் விளக்கப்பட்டிருக்கின்றது.

● தொழிற் சங்கங்களின் அவசியத்தையும் பரிசுத்த தந்தை ஆதரித்திருக்கிறார். ஆனல் நீதிநியாயமற்ற வேலைநிறுத்தங்கள் கண்டிக்கப்பட்டிருக்கின்றன.

## கருதினல் வில்லெபிரன்ஸ் மொஸ்கோ செல்கிறார்

சில வாரங்களின் முன் மரணத் திரையில் மறைந்த ருஷியதேச பிதாப் பிதாவினிடத்தில் புதிய பிதாப் பிதா ஒருவர் அண்மையில் தெரியப்படவிருக்கிறார். அச்சமயம் அவ்வைபவத்தில் பங்குபெற ஒரு சிறு குழுவினரை வத்திக்கான் பிரதிநிதிகளாய் அனுப்பி வைக்க ருஷிய அரசாங்கம் கேட்டு அனுப்பிய அழைப்பை ஏற்று இருவர் அடங்கிய ஒரு சிறு குழுவை பரிசுத்த தந்தை மொஸ்கோ அனுப்ப இருக்கின்றார். இக்குழுவின் தலைவராக ஒற்றுமை விவகார காரியாலயத் தலைவர் கருதினல் வில்டபிரன்சும் அவருக்கு உதவியாக ஜோண் லோங் சுவாமியாரும் செல்ல இருக்கின்றனர்.

# அனைத்துலகும் கிறீஸ்துதமை அறிதல் வேண்டும்

அனைத்துலகும் கிறிஸ்துதமை அறிதல் வேண்டும்
அதற்கெனவே மறைப் பணிகள் புரிதல் வேண்டும்
அனைவருமே மறுமலர்ச்சி கொள்ளல் வேண்டும்
பெருநகம் ஆயர்கள் போலாக வேண்டும்
திணையளவு விசுவாசம் உண்டேயானல்
திருமறைக் காய்த் தொண்டாற்ற முயலவேண்டும்
அனைத் திழ மறைக் கல்விச்சபை விழாவை
ஆனந்த மகிழ் வொடு கொண்டாட வேண்டும்.

●

மக்கள் மனம் மாறி நலம் பெறுதல் வேண்டும்
மாண்புடைய திருமறை நூல் பயிலல் வேண்டும்
இக் கணமே மறைப் பணியில் ஆர்வம் பெற்ற
இளைஞர்களை நல் வழியிற் பயிற்றல் வேண்டும்
தக்கவர்கள் தாய் தந்தை மற்றோர் யாரும்
தவறாத மறைச் சபையோடிணைந்து நின்று
எக்காலும் மறைக் கல்வி பயிற்றும் வண்ணம்
ஊக்கமுடன் உழைத்திட முன்வருதல் வேண்டும்.

●

விண்ணகத்தும் மண்ணகத்தும் முழுவுரிமை
எனக்குளதால் நீவிர் சென்று
எண்ணரிய மக்கள் குழாம் யாவரையும்
அறிவுறுத்தி அவர்கள் தம்மில்
கண்ணினிய விசுவாசம் உடையவர்கள்
எவரெவரோ அவரை யெல்லாம்
தண்ணீரால் முழுக் காட்டிச் சபையினிலே
சேர்த்திடுகெ வென்றார் அன்றே.

# விசுவாசப் பரப்புதற் சபையின் புதிய இரு இணைச்செயலாளர்

விசுவாசப்பரப்புதல் சபையின் புதிய இரு இணைச் செயலாளராய் வத்திக்கானில் கடமையாற்றிவர ஆபிரிக்காவிலிருந்தும் ஆசியாவிலிருந்தும் ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்; ஆபிரிக்காவிலிருந்து முன்னாள் கொனெக்ரே பிரிவின் அதிமேற்றிராணியாராகிய கன்ரின் அடிகளாரும், ஆசியாவிலிருந்து முன்னாள் பங்களூர் பிரிவு அதிமேற்றிராணியாராகிய லூர்துசாமி அடிகளாருமே இருவராவர். பரிசுத்த சபையின் அதிபராகிய கருதினல் றொசி அடிகளார் இவ்விருவரையும் காரியாலய மறு உதவியாளருக்கு அறிமுகம் செய்துவைத்து விசுவாசப் பரப்புதல் சபை மேலும் மேலும் சர்வதேச மயமடைந்து வருவதில் தமது மகிழ்ச்சியைக் காட்டினார்.

# ஒரு மூடுபனி எம்மைச் சூழ்ந்திருக்கின்றது

தேவ அழைத்தல் உலகின் பல பாகங்களிலும் குன்றி வருகின்றதைக் குறித்து பிரான்சுதேச மேற்றிராணிமாருள் ஒருவராகிய வகாட் அடிகளார் "இன்றைய உலகத்தில் ஒரு மூடுபனி எம்மைச் சூழ்ந்திருக்கின்றது என்கிறார்." எனினும் மூடுபனி வருவதும் அகன்றுவிடுவதும் சர்வசாதாரணமாய் இருப்பதுபோல் மக்கள் தமது பிழைகளை உணர்ந்து தேவனது தொண்டை நாடும் காலமும் விரைவில் வரும் என தேற்றரவும் அளித்திருக்கின்றார்: வேறு ஒரு மேற்றிராணியார் பிள்ளைகள் குருத்தொண்டைப் பற்றியுள்ள தப்பபிப்பிராயமே தேவ அழைத்தல் குறைவதற்குக் காரணமென்கிறார். குருமார் பொதுஜன சமூகத்திலிருந்து அப்பாற்பட்டவரெனும் தப்பபிப்பிராயமே இதற்குக் காரணமென அவர் கூறியிருக்கின்றார்; இத்தப்பபிப்பிராயங்கள் நீக்கப்படுமாயின் மீளவும் முன்போல் தேவ அழைத்தல் போதியளவு இருப்பதைக் காணலாம் என்கிறார் இவர்

# செற்ஜெயிறே அடிகளார்

## ஓய்வுபெறுகிறார்

இன்று கருதினல்மாராயிருப்பவர்களிலே கூடியகாலம் அப்பதவியிலிருந்துவரும் லிஸ்பன் நகர பிதாப்பிதாவாகிய செற்ஜெயிறே அடிகளார் 41 வருடகாலமாக லிஸ்பன் நகர கருதினலாய்க் கடமையாற்றியபின் தன் பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றார். இன்று அவரது வயது 82. இற்றைக்கு 41 வருடங்களின் முன் இவர் கருதினலாக நியமிக்கப்பட்டார். இவரது இடத்தில் 43 வயது நிரம்பிய அன்ரோனியோ றிபெயிறோ அடிகளார் நியமனம் பெற்றிருக்கின்றார்.

# நிரந்தர தியாக்கோன் நிலைமைக்கு அமெரிக்காவில் ஆதரவு

இதுகாலவரையும் தியாக்கோன் பதவி குரு அபிஷேகத்துக்கு முந்திய ஒரு நிலைமையாக இருந்துவந்தது. ஆனல் உலகின் பலபாகங்களிலும் வத்திக்கான் சங்கத்துக்குப்பின் தியாக்கோன் நிலைமைக்கெனவே நிரந்தரமாகவும் சிலர் அபிஷேகம் பெற்று வருகின்றனர். ஐக்கிய அமெரிக்கா தேசத்தில் நிரந்தர தியாக்கோன் பதவியைப் பலர் விரும்புவதாகத் தோற்றுகின்றது. சிக்காக்கோ நகரின் கருதினல் கோடி அடிகளார் விடுத்துள்ள அறிக்கையில் 1969-ம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா தேசத்தில் 480 நிரந்தர தியாக்கோன்மார் அபிஷேகம் செய்யப்பட்டனரென்றும் தனது அதிமேற்றிராசனத்தில் இன்று 150 பேர் அப்பதவிக்கு ஆயத்தம் செய்து வருகின்றனரென்றும் அறிவித்தார்.


எதிர்பாருங்கள்!

மாபெரும் மறைக்கல்வித் தினத்தைச் சிறப்பிக்கும் முகமாக

* சொற்பொழிவுகள் * நடனங்கள்
* நாடகங்கள்

இன்னும் பல இனிய கலைநிகழ்ச்சிகள் இடம்பெற இருக்கின்றன;

எங்கே!!
யாழ். ஆசனக்கோவில், திறந்த வெளியரங்கம்.

எப்போ!!!
6—6—71 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மறைக்கல்வி நடுநிலையம்,
யாழ்ப்பாணம்.


"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

# திருவருட் சாதனங்களைப் பெறுவதற்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தல்

(சங். சகோதரி செருபிம்)

(சென்றவாரத் தொடர்ச்சி)

பாவத்தினுற் பாதிக்கப்பட்ட இறைவனுக்கும், பாவிக்கும் இடையேயுள்ள உறவு பாவமன்னிப்பினுல் மீண்டும் புதுப்பிக்கப் படுகின்றது. மேலும், பாவத்தினுல் பாதிக்கப்படும் அயலாரோடுள்ள உறவும் பச்சாத்தாபம் என்னும் திருவருட்சாதனத்தினுல் மீண்டும் தொழிற்படுகிறது என்ற பொதுக்கருத்தையும் பிள்ளைகள் விளங்கிக் கொள்ளச்செய்தல் அவசியம். தான் புரிந்த ஒவ்வொரு பாவமும் இறையன்புக்கு எதிராக மாத்திரமல்ல, தனது அயலானுக்கு இழைக்கப்படும் துரோகமுமாகும் என்பதைக் குழந்தைகள் உணரச்செய்தல் பலனளிக்கும்.

புதுநன்மை பெற ஆயத்தப்படுத்தும் சிறுவர்களைப் பொதுப் பச்சாத்தாபச்சடங்கிற்கு ஆயத்தப்படுத்துவதன் மூலம், இத்தகைய பொதுக் கருத்துக்களை அழுத்திக் கூறலாம். குழந்தைப்பருவத்திலிருந்தே தன்னடக்கத்திலும் மனச்சாட்சியின் வழியிலும் நடக்கப் பெற்றோரும் மற்றோரும் துணைசெய்யவேண்டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடத்திலும் ஆசிரியரிடத்திலும் முழு நம்பிக்கை வைக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கைக்கு நாம் துரோகம் செய்யக்கூடாது. எனவே, சொல்லிலும், செயலிலும் இன்னும் பல்வேறு காரியங்களிலும் உண்மையாக நடந்துகொள்ளுதல் வேண்டும். சிறுவர்களை ஏமாற்ற முடியாது; அவர்களுக்கு வார்த்தைகள் விளங்காவிட்டாலும் செய்கையினுற் பல காரியங்களைப் புரிந்து கொள்வார்கள். அவர்களிற் முன் செய்யப்படும் காரியங்கள் பொய்யானவையானுல் குழந்தையின் நம்பிக்கை ஏமாற்றப்படும். மனச்சாட்சியும் மங்கிப்போகும். பெற்றுரிடமுள்ள மன்னிக்கும் தாராள மனப்பான்மையானது, பிள்ளை இறைவனின் மன்னிப்பை விளங்கிக்கொள்வதற்கு வழிநடத்த வேண்டும். இதன்மூலம், தனது சகோதர சகோதரிகளுக்கு, உடன் தோழருக்கு மன்னிப்புக்கொடுக்கத் தூண்டப்படும். பாவத்தைப்பற்றியும் மன்னிப்பைப்பற்றியும் குழந்தை ஓரளவு விளங்கிக்கொண்டதும், மனஸ்தாபத்தைப்பற்றி அறிவுறுத்தல் நலம். இதற்கு உறுதுணை புரிவது "பரலோகமந்திரம்." யாவற்றிலும் மேலாக, பெற்றோரின் எடுத்துக்காட்டான கிறிஸ்தவ வாழ்வு பிள்ளையின் மனச்சாட்சியை உருவாக்கும் சிறந்த சாதனமாகும்.

கிறிஸ்தவ வாழ்வினதும், கிறிஸ்தவ வழிபாட்டினதும் சிகரமாக விளங்குவது திவ்விய நற்கருணையும் திருப்பலியுமாகும். மற்றெல்லாத் திருவருட் சாதனங்களும் வழிபாடுகளும் இதனையே நோக்காகக்கொண்டு அமைந்துள்ளன என்பதைப் பிள்ளைகள் ஒரு சிறிதாவது விளங்கிக் கொள்ளச் செய்வது முதற் கடன். திருவழிபாடு நடக்கும் இடமான தேவாலயத்தைப்பற்றியும் இவ்விடத்திற் சிந்திக்கச் செய்தல் சிறந்தது. எமது நாளாந்த வாழ்வோடு மிக நெருங்கிய தொடர்புடைய வணக்கம், நன்றி, கருணை, மன்னிப்பு என்ற சொற்களையும், அவை தரும் பொருளையும் கையாண்டு, பலியினதும் நற்கருணை விருந்துச் சடங்கினதும் பிரதான நோக்கங்களைப் பிள்ளைக்கு விளக்கலாம். வசீகரம் பண்ணப்பட்ட அப்ப-இரசக் குணங்களின் மறைவிலே கிறிஸ்து சிறப்பான முறையிற் பிரசன்னமாயிருக்கிறார். என்றும், பலியை நிறைவேற்றுங் குருவிலும் இறையன்பு-பிறரன்பில் இணைந்து பலிக்குச் சமுகமளித்திருக்கும் விசுவாசிகள் கூட்டத்திலும் கிறிஸ்து பிரசன்னமாயிருக்கிறார் என்பதையும் பிள்ளையின் இயல்புக்கேற்ற முறையில் விளக்கவேண்டும். இதனுற்றுன் நாம் ஒரே குடும்பமாகப் பலி ஒப்புக்கொடுத்துத் திருவிருந்திற் பங்குகொள்கிறோம்; அன்பின்றிப் பலியில்லை, பலியின்றேல் அன்பில்லை என்ற உண்மைகளைப் பிள்ளைக்குணர்த்த வேண்டும். யேசுவின் பாடுகள், மரணம், உத்தானம் என்னும் மறைபொருளை நாடோறும் புதுப்பிக்கின்ற பெரும் அன்பின் தியாகமே திருப்பலியும் திருவிருந்தும் என்பதை அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள்மூலம் விளக்கலாம். ஆனுல், பெற்றோர் கூடுமானபோதெல்லாம் குடும்பசகிதமாகத் திருப்பலியிற் பங்குபற்றி, நற்கருணையிற் கிறிஸ்துவை உட்கொள்வதைக் காண்பது குழந்தைக்குச் சிறந்த சாதனையாகும்.

இறையாவியின் அருளை எமக்களிப்பது உறுதிபூசுதல். இவ்வருட் சாதனத்திற்கும், ஞானஸ்நானத்திற்குமுள்ள தொடர்பைப் பிள்ளை தன் நாளாந்த வாழ்வில் அனுபவிக்கப் பெற்றோர் உதவவேண்டும். தூயஆவியின் பலம், வார்த்தையினுலும், செயலினுலும் தம் விசுவாசத்திற்குச் சாட்சிபகருகின்ற கிறீஸ்தவ அப்போஸ்தல அர்ப்பணிப்புடன் வெளியாங்க தொடர்புடையதாய் விளங்குமாறு குழந்தையின் வாழ்க்கைச் சூழல் அமையவேண்டும். இவ்வருட் சாதனத்தை அளித்தல் கிறீஸ்தவனின் குறித்த ஒரு வளர்ச்சியோடு பொருத்தமுள்ளதாய் இருக்கவேண்டும். ஏனெனில், உறுதிப்பூசுதல் பொதுநிலையினரின் அப்போஸ்தலபணிக்கு ஆயத்தம் செய்யும் திருவருட்சாதனமாகப் புதியரீதியில் மதிக்கப்படவேண்டும் என்பதுபலரது அபிப்பிராயம். இவ்விடயத்தில்வசதிக்கேற்றபடிபெற்றோருடன் கலந்து ஆலோசனை செய்யவேண்டும். அன்றியும், கிறீஸ்தவ சமூகத்தில் ஓர் இளைஞர் தனது பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடிய தகைமையை அடையும்போது, அல்லது பாடசாலைப் படிப்பை முடிக்கும்போது இவ்வருட்சாதனத்தைப் பெறுதல் சிறந்ததாகும் என்பதும் மறைப்பெரியார் பலரின் கருத்துமாகும்.

கிறீஸ்தவ வாழ்வு நித்தியமானது. இந்நித்திய வாழ்வுக்கு எம்மை இட்டுச்செல்லும் வழி மரணம். இவ்வழியில் நாம் பிரவேசிக்கும்போது, எம்மைத் திடப்படுத்தி, பரலோக யாத்திரைக்குத் தகுதியுள்ளோராய் ஆக்கஉதவும் திருவருட்சாதனம் நோயிற்பூசுதலாகும். நோயாளியின் பூசுதல் நடைபெறும்போது, குடும்ப அங்கத்தினரும், இனசனரும், அயலவர்களும்சமூகமளிப்பதினுல் குழந்தைக்கு இளமைப் பருவத்திலேயே இத்திருவருட் சாதனத்தைப் பற்றிய விளக்கம் உண்டாகின்றது. பின்னர் வேண்டும்போது இதனைப் பெறுவதற்கும், மற்றோருக்குக் கொடுக்க உதவுதற்கும் பிள்ளை தானுகவே முன்வரும்.

இறுதியாக, வாழ்வில் ஒரு நிலையைத் தேர்ந்தெடுத்து அதன்படிவாழத் துணையாகக் குருத்துவமும், திருமணமும் இறைவன்தந்த வழிகளாம். எனவே, திருவருட் சாதனங்கள் வழியாகத் திருச்சபை; திருச்சபை வழியாகக் கிறீஸ்து; கிறீஸ்துவில் இறைவனேடு உறவு. ஆனுல், இன்றைய நமது விஞ்ஞான உலகு இறைவனை அறவே அகற்றும் மூடஉலகாக மாறுகிறது. இத்தகைய சூழ்நிலையில் நம் நாட்டுக் குழந்தைகட்கும் இளைஞருக்கும் இறையருளைப் பெற்றுக்கொடுப்ப தெங்ஙனம்? திருவருட்சாதனங்களை அவர்கள் தகுந்தமுறையிற் பெற்றுக்கொள்ள வழிசெய்வதினுலென்க. இதற்குப் பெற்றோர், குருக்கள், ஆலோசகர்கள், பொதுநிலைத் தொண்டர் ஆகியோர்பாடசாலைகளின் மறைக்கல்வி ஆசிரியர்களோடு இணைந்து வளமூட்டும் நோக்குடையோராய் இருத்தல்அவசியம்.

நமது பிள்ளைகள் கலையரங்கிலல்ல, திரையரங்கிலல்ல ஆனுல் என்றுமே அழியாத நமது மீட்பர் நமக்குப் பெற்றுத்தந்த விண்ணரங்கில் விண்மீன்களாய்மின்ன ஆவன செய்வோம்.

### நன்றித்துதி

திரு இருதய நாதரின் இரக்கத்தாலும், பரிசுத்த செபமாலைத் தாயார், குடும்பங்களின் காவலர் சூசையப்பர், கோடி அற்புதர் அந்தோனியார், யூதா ததேயுஸ் முதலாம் புனிதர்கள் மன்றுட்டினுலும் எனது கணவர் காலில் ஏற்பட்ட நோய் மாறிச் சுகம்கிடைத்தது. ஆகவே நேர்த்திப் பிரகாரம் இதனை பிரசுரிக்கிறேன்.

பிரசுரிக்க காலதாமதம் ஆனமைக்கு மன்னிப்புக் கோருகிறேன்.

தேவதிருக்கரம் இன்றும் என்றும் எம்மை வழிநடத்தவேண்டி நன்றி கூறுகிறேம்.

அடம்பன் ஓர் அடியாள்

# பணிபுரிய வாரீர்

விளகேற்றுவோம் எ. மெ.

**பல்லவி**

பணிபுரிவோம் நாம் பணிபுரிவோம்—மறை
உடல் வளர்த்திட தினம் பணிபுரிவோம்.

**அனுபல்லவி**

உலகெங்கும் நாடெங்கும் நகரெங்கும் ஊரெங்கும்
மலர்ந்திட மறைப்பணி புரிந்திடுவோம்

**சரணங்கள்**

●

மறை பரப்பும் திருப்பணி என்றும் விளங்க
மாந்தர் யாரிலும் புது உயிர் துலங்க
விஞ்ஞான யுகத்தில் மெய்ஞ்ஞானம் மிளிர
இறைப் பணிக்கே என்றும் அர்ப்பணம் செய்து.

●

மறையின் பணியை ஆயரும் பிறரும்
முறையிற் புரிவர் என்பதை விடுத்து
பெற்றோர் தங்கள் பெருமை உணர்ந்து
புத்துயிர் கொண்டு பொறுப்பினை ஏற்று

●

கிறிஸ்துவின் உருவை ஆக்குநற் தொட்டில்
கிறிஸ்தவ இல்லமே என்பதை உணர்ந்து
பெற்றோர் யாவரும் ஆற்றல் அடைய
மறை நூல் கற்று மாண்பொடு விளங்கி

●

அறிவும் வாழ்க்கை நெறியும் சிறந்து
மறையின் கல்விச் சபையில் நிறைந்து
சிறுவர் யார்க்கும் ஆன்ம கல்வியை
பயிற்றல் பெற்றோர் கடனென உணர்ந்து.

# கிறிஸ்தவ திருமறைக் கல்விச் சபையின் திருவிழா

எஸ். எவ். சவுந்தரம், மறை ஆசிரியர்

(முன் தொடர்ச்சி)

**குழுவினரின் பணிகளிலே:**

விடுமுறை நாட்களில், மறைக்கல்வி வகுப்புகள் நடத்துவதினுலும், மறைக்கல்வி வளர்ச்சிக்கான அறிவுரைகளை அஞ்சல் மூலம் போதிப்பதாலும், மறைக்கல்விப் பயிற்சியை மக்கள் மத்தியிலே அனுஷ்டித்துச் செய்வதினுலும், மறை போதகத்திற்குதவியாக, பெற்றோர் தொடர்பு, பிள்ளைகளின் சூழல் இவைகளைக் கவனிப்பதாலும், இன்னும் இவைபோன்ற நல்ல செயல் முறைப்பணிகளாலும் கற்பிப்போர் குழு, குருக்கள், துறவியர், மறை ஆசிரியர் இவர்களுக்கு உதவியாக இருப்பர்.

விசாரணைப் பங்குகளின் குடும்பங்களை முறையே தரிசித்து, சுற்றாய்வுகள் நடத்துவதினுலும், சமயக்கடமைகளில் தவறி விலகியோரைத் திரும்பவும் மந்தைக்குள் சேர்ப்பதும், மேலும் மேலும், இப்பக்திச்சபையின் அங்கத்தவர்களாக மக்களைச் சேர்ப்பதும், கத்தோலிக்க பிரசுரங்களைப் பரப்புவதும் இன்னும் இவை போன்ற காரியங்கள் தரிசிப்போர் குழுவிற்குச் சேர்ந்தவையாகும்.

வகுப்புகள், உலாயாடல்கள், மறைவிளக்கம், இவை நடத்துவதற்கான அறைகளைத் தயாரிப்பதும், மறைக்கல்வி வளர்ச்சிக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதும், கத்தோலிக்கபத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் இவைகளைப் பரப்புதல், பக்திச்சபையின் நூல்நிலையம் ஒன்று நிறுவி நடத்துதல் போன்ற விஷயங்களில் துணைபுரிவோர் குழுவைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுவர்.

பெற்றோர் கல்விக்கான உபகரணங்களைச் சேகரித்தல், பரப்புதல், இப்பக்திச் சபையால் திட்டமிடப்பட்ட மறைக்கல்வி ஒழுங்கின்படி பிள்ளைகளுக்கு வீட்டில் மறைக்கல்வி யூட்டும் வழக்கத்தை அபிவிருத்தி செய்தல், மறைக்கல்வி வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்களாக, பிள்ளைகளை மறைக்கல்வி வகுப்புகளுக்கு அனுப்புதல், இது போன்ற விஷயங்களில் பெற்றோர் மன்ற உறுப்பினர் பங்குகொள்வர்.

இளைஞர்களுக்கான வளர்ந்தோருக்கான கூட்டங்களை உருவாக்கல், விசுவாச வாழ்விலும் நல்லொழுக்கப்பாதையிலும் நடக்க இளைஞர்களுக்குப் புத்தி போதனைகள் கொடுத்தல் செய்முறைப் பாடங்களை நடத்துதல், பொருளாதார முன்னேற்றத்தில் சுமூகமான வழியைக் காட்டுதல் போன்ற விடயங்களில் அறிவுக்கழகக் குழுவினர் முன்னிற்பர்.

பிறமத மக்களுடன் உரையாடி, போதித்து, நல்லுறவுண்டாக்கி அவர்களும் கிறிஸ்துவின் ஒளியை விசுவாச வெளிச்சத்தில் காணுவதற்கான நடைமுறை வழிகளைக் கையாளுவது திருமறைத் தூதுவர் குழுவைச் சேர்ந்தவர்களின் விசேடபணியாகும்.

இவ்விதமாக கிறிஸ்தவ திருமறைக் கல்விச்சபை பிரிக்கப்பட்டு, பரந்த அளவிலே பங்குத்தளங்களில் பணிபுரியும்.

**நிர்வாக முறையிலே:**

ஆறு குழுவினரின் தலைவர், உபதலைவர், செயலர், பொருளர் இவர்களின் கூட்டமே

(மறுபக்கம் பார்க்க)

# இது பொதுநிலையினரின் பொற்காலமன்றோ!

ஐயோ நான் ஒரு சுவாமியாய்ப்போய் இருந்தால், ஐயோ நான் ஒரு கன்னியாஸ்திரியாய்ப்போய் இருந்தால் எவ்வளவு நல்லாய் இருக்கும். நானும் பலிப்பூசை நிறைவேற்றுவேன், நானும் அழகான திருவுரை நிகழ்த்துவேன், எத்தனையோ மறைக்கல்வி வகுப்புகள் நடத்துவேன், திருமறையின் வளர்ச்சியில் சலிக்காது பாடுபடுவேன். இப்படியெல்லாம் எத்தனை எத்தனையோ எண்ணி ஏக்கத்திலே வாழும் ஏராளமான தாராளமான மனமுள்ள இளவல்களை, பெற்றோர்களை, இன்று நாம் அடிக்கடி சந்திக்கின்றோம். தனக்கு கிடைக்காத, எட்டாத பிறிதொன்றை எண்ணி, ஏங்குவது மனித இயல்பன்றோ! இருந்தும் ஏங்கும் இந்த மனித இயல்பு எந்தப் பணியை, செயலைச் செய்ய குறிப்பிட்ட ஒரு நிலையை வேண்டி நிற்கின்றதோ அந்தச் செயலை இருக்கும் நிலையில் (பொதுநிலையில்) இருந்து கொண்டே செய்ய முடியுமா? முடியாதா? ஏன் முடியாது? என்னும் வினாக்களைத் தன்னைத்தே கேட்டு விடை காணுகிருப்பது வியப்பாகத் தோன்றுகின்றதன்றோ.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவனாக அழைக்கப்படுகின்ற அந்த நேரத்திலேயே அப்போஸ்தலனாகவும், அழைக்கப்படுகின்றான். தேவதிரவிய அனுமானங்களினாலே அருள் வட்டம் பெற்று அப்போஸ்தலப் பணிக்காக இறை ஆவியால் உந்தப்படுகின்றான். இருந்தும் திருச்சபையின் கால ஓட்டத்திலே இப்பணி ஒரு சிலருக்கு ஒதுக்கப்பட்ட தென்றுப்போல் பெரும் பகுதி மக்கள் மத்தியிலே மறக்கப்பட்ட ஒரு பணியாகவே இருந்திருக்கின்றது. இந்த நிலை முற்றாக மாற்றப்பட்டு, மக்களின் ஏக்கத்தை பூர்த்தியாக்கும் புதிய தொரு நிலை இன்று உருவாகி இருக்கின்றது. அதுதான் கிறிஸ்தவ திருமறைக் கல்விச்சபை. ஒவ்வொரு பங்குத் தளங்களிலும், பரந்த அளவிலே பணி செய்யக் காத்திருக்கும் இம் மறைக் கல்விச் சபையிலே உங்கள் ஏங்கும் இதயத்தை அர்ப்பணித்து விடுங்கள். அப்போது நீங்களும் திருமறை ஆசிரியராய், திருமறைத் தூதுவராய், திருப்பணி புரிவோராய் இன்னும் பல வழிகளில் திருமறையின் காத்திரமான அப்போஸ்தலராய் திகழுவீர்கள். பொதுநிலையினருக்கு உரிமையும், கடமையுமான இந்த அப்போஸ்தல பணியைத்தான் தாய்த் திருச்சபை இன்று மக்களிடம் வேண்டி நிற்கிறது.

## கிறிஸ்தவ திருமறை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

நிர்வாகசபையென அழைக்கப்படும். நிர்வாக சபையின் செயல் உறுப்பினர்கள் நிர்வாக அங்கத்தவர்களின் வாக்குப் பதிவுகளின் மூலம் ஒவ்வொரு வருடத் தொடக்கத்திலும் தெரிந்தெடுக்கப்படுவர். நிர்வாக சபையில் கூட்டம் மாதத்திற்கு ஒரு முறையும், ஒவ்வொரு குழுவினரின கூட்டம் வருடத்திற்கு ஆறு முறையும் கூடி மறைக்கல்வி வளர்ச்சியின் பணிகளுக்கான ஆயத்தங்களைச் செய்வர். இப்பக்திச் சபையின் எல்லா உறுப்பினர்களையும் கொண்ட பொதுக்கூட்டங்கள் வருடத்தில் இருமுறை நடைபெறும்.

**சடங்கு முறையிலே:**

இப்பக்திச்சபையின் கோர்வையிலே சேர்ந்து செபத்திலும், சேவையிலும் தம்மை அர்ப்பணிக்க விரும்பும் ஒவ்வொருவரும் சபையின் விசேட ஆராதனைச் சடங்குகளின் மூலம் குருவானவரால் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**விழாவின் முழுமையிலே:**

இவ்வாறாக உன்னத நோக்கங்களை உயரிய செயல் திட்டங்களை விரிந்த பரந்த மறைக் கல்வி பயிற்சிப் பணியை தன்னுள்கொண்டு விளங்குவது தான் நாம் இன்று விழா எடுக்கும் கிறிஸ்தவ திருமறைக்கல்விச்சபை.

ஆம்; இந்த விழா எங்கள் உள்ளக் கதவுகளைத் தட்டட்டும், உள்ளத்திலே புத்துணர்ச்சியையும் புதிய எழுச்சியையும் பிறப்பிக்கட்டும். எங்கள் ஒவ்வொருவரையும் கிறிஸ்தவ திருமறைக் கல்விச் சபையின் அங்கத்தவர்களாக்கி, இக்கட்டான இக்காலத்தில் மறைக்கல்வி முறையில் மாற்றத்தையும் புதுத் தோற்றத்தையும் கொண்டுவரச்செய்யட்டும். அப்போது தான் இத்தவிழா ஒரு பெரிய விழாவாக-நிறைந்த விழாவாக அமையும்.

நட்டுங்கள் கட்டாயம் உள்ளங்கள் திறக்கப்படும்.

# செய்திகள்

### குடிசனக் கணக்கு

வருகிற ஆடிமாதம் 8ஆம் திகதிமுதல் 17-ந் திகதிவரை எடுக்கப்படவிருந்த இலங்கை குடிசன ஆரம்ப கணக்கெடுப்பும், அம்மாதம் 27-ந்தேதி எடுக்கப்படவிருந்த குடிசன இறுதிக்கணக்கெடுப்பும் வருகிற ஐம்பசி, மார்கழி மாதங்களுக்குப் பின்போடப் பட்டுள்ளன.

### ஜி. சி. ஈ. பரீட்சைப் பேறுகள்

சென்ற மார்கழி, பங்குனி மாதங்களில் நடைபெற்ற ஜி. சி. ஈ. பரீட்சைப் பேறுகள் வெளியாவதில் காலதாமதம் ஏற்படும்போல் தெரிகிறது. திருத்துவதற்கென்று பரீட்சைப்பகுதியின் பரீட்சகர்களுக்கு அனுப்பிவைத்த பரீட்சார்த்திகளின் விடைப்பத்திரங்கள்பல இதுவரை அதற்குத் திருத்தியனுப்பப் படாமையே இதற்குக் காரணமாகும்.

### மகாவலி கங்கைத் திட்டம்

நாடுமுழுவதிலும் ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் இருந்தபோதிலும் மகாவலி கங்கையை வடக்கே திசை திருப்பும் வேலை துரிதமாக நடைபெற்று வருகின்றது. இந்த வேலைத்திட்டத்தை முறையாக நடத்திவைக்குமாறு பாரிய நவீன யந்திரங்கள் பிரயோகிக்கப் படுகின்றன.

### விருந்துக் கட்டுப்பாடு

இந்தஆனிமாதமுதல் விருந்துக் கட்டுப்பாடு நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதிலும் ஒரு திருத்தம் இப்போது செய்யப்பட்டுள்ளது. அதாவது விருந்து வைபவங்களின் போது 150பேருக்கு மேற்பட்டவர்களுக்கு உணவுப் பொருட்கள் மட்டுமல்ல, குளிர்பானங்கள் வழங்குவதும் தடைசெய்யப் பட்டிருக்கிறது.

### அரசாங்க உதவிப்பணம்

அரசாங்கம் மாதந்தோறும் உதவிப்பணம்வழங்கும்ஏழை மக்களில் 50வயதுக்குக் கீழ்ப் பட்டவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது: இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொருவருக்கும் நன்கொடையாக அரசாங்கம் 500ரூபா வழங்கும். இதனை ஒருமுதலாகக்கொண்டு அவர்கள் ஒரு சிறுதொழிலை மேற்கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும், நடத்தினால்இந்தப் பணத்தை திரும்பச்செலுத்த வேண்டியிராது. இந்தப்பணத்தை விரும்பாதவர்களுக்கு மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படும். 500ரூபா நன்கொடைப்பணம் பெற்றவர்களுக்கு அது வழங்கப்பட்ட மாதத்திலிருந்து உதவிப்பணம் வழங்குவது நிறுத்தப்படும்.

### புதுமாதிரிக் கண்ணோய்

கொழும்பு மாவட்டத்தில் புதிதாகத் தலைகாட்டி வேகமாகப் பரவிவரும் கண்ணோய் மற்றும்சில மாவட்டங்களிலும் பரவிவருவதாகத் தெரிய வருகிறது. இதனால் அதிகமாய்ப் பாதிக்கப்படுவோர் பாடசாலை மாணவரும், குழந்தைகளுமே. கொழும்பு அரசினர் பெரிய ஆஸ்பத்திரியில் இதுவரை 25,000 பேருக்கு மேல் கண்ணோய்ச் சிகிச்சை பெற்றிருப்பதாக அறிவிக்கப் படுகிறது.

### நாடெங்கும் ஒரே நிலை

அத்தியாவசிய உணவுப் பொருள்களையும், மற்றும் உபஉணவுப் பொருள்களையும் நாடுமுழுவதிலும் ஒரேவிலையில் விற்கக்கூடியதாகக் கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனம் புதிய திட்டம்ஒன்றை வகுத்துள்ளது. இந்த ஆனி மாதத்திலிருந்து நடைமுறைக்குவரும் இத்திட்டத்தைத் திறம்பட நடத்துமுகமாக அது நாட்டின் பலபாகங்களிலும் 17விற்பனவு நிலையங்களைத் திறந்திருக்கிறது.

### வண. அகஸ்ரின் சுவாமியாரவர்களின் குருத்துவ

## வெண் பொன் யூபிலி

தீயசக்திகளின் தாப்போதனைகட்குள் அகப்பட்டு பயங்கரவாதிகள் எனநாமந்தாங்கி, எம் நாட்டையும், நாட்டு மக்களையும் அநேக நஷ்டகஷ்டங்களுக்குள் இழுத்துச்சென்று அநேக அட்டூழியங்கள், படுகொலைகள் ஆதியன கூசாது செய்து, அரசாங்க வலையில் வகைதெரியாமல்அகப்பட்டுத் தம் தலைகளை இழுத்துக் கொள்ள முடியாது மாட்டிக் கொண்ட வாலிபர்-வாலிகைகளின் அதர்மச்செயல்களால் எம்நாடு அல்லோல கல்லோலப்பட்டுத் தவிக்கின்றது, அந்தோ பரிதாபம்.

இத்தருணத்தில் எம்வாலிப மக்கட்கு நல்லுரைகூறி, நல்வழிப்படுத்த நல்வழிகாட்டிகளாய்ப் பெற்றோர், உற்றோர், ஆசிரியர், பெருமக்கள் எல்லோரையும் எம்நாடு தனதுநேசக் கரங்களை நீட்டி அறைகூவி அழைக்கின்றது.

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே பிள்ளைவளர்ப்பின் முக்கியத்தை உயிர்நாடியாய் உணர்ந்து ஆணித்தரமாய் இடித்துரைத்து, இளைஞர்களை நல்வழிப்படுத்துவதே தம் மூச்செனமூசிமூசிப் பிரசங்கஞ்செய்த குருமாரில் ஒருவராம் வண. அகஸ்ரீன் சுவாமியாரை எம்நாடு, பயங்கரவாதிகளின் பிடியில் அகப்பட்டு அவதிப்படும்இத்தருணத்தில் நினையாமல், சிந்திக்காமல் இருக்கமுடியுமா? அவர் வாலிபமக்களின் வருங்கால சீவியத்தை வளப்படுத்தத் தம் வாய்ச்சால பிரசங்கங்கள், அறிவுரைகள்மூலம் ஆற்றிய அரிய சேவைகளைப் போற்றாமல் இருக்கமுடியுமா?

அவ்வித அரும்பெரும் குருவாம் வண. அகஸ்தீன் சுவாமியாரின் குருத்துவ வெண்பொன் யூபிலியைக் கண்டு களிக்கும் தினம் அண்மித்ததையிட்டு ஆனந்தபரவசம் கொள்ளுகின்றோம், குதூகலிக்கின்றோம்.

எதிர்வரும் ஆனித்திங்கள் 13-ம் நாள் ஊர்காவற்றுறை மக்கள் புனித அந்தோனியார் உற்சவத்தன்று யூபிலிநாயகரது 50-ம் வருட யூபிலியைக் கொண்டாடுவார்கள்.

மறுநாள் 14-ந்தேதி அன்னாரின் உற்றோர், உறவினர், அயலவர் தங்களின்முற்றிப்பழுத்த தவப்புதல்வனின் யூபிலிப் பலியை நிறைவேற்றி, தமது வாழ்த்துக்களைச் சமர்ப்பித்துத் தேவன் இன்னும் அவருக்குச் சுகபெலம் அருளி, அவர் செய்த செய்யும் குருத் தொண்டிற்கு நன்றிகூறுவார்கள்.

— A. சுவாம்பிள்ளை

### பாடசாலைகளின் ஆரம்பம்

இந்தஆனிமாதம் 2-ந்தேதியன்று பாடசாலைகள் மறுபடியும் ஆரம்பமாகுமென முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தும் நாட்டில் பரவிய கண்ணோய் காரணமாக அவற்றின் ஆரம்பதினம் இம்மாதம் 9-ந்திகதிக்குப் பின்போடப் பட்டிருக்கிறது.

## மனுப்பேசும் தாய்

(லோ. மரியநாயகம்)

மறு வில்லாத் தாயே நீர்
  மனு மகனின் தாயா னீர்
மறு வுலகாம் மோட்சத்தில்
  மனுப் பேசும் தாய் நீரே

*   *   *

மறு வுருவில் காட்சி தந்தே
  மனுக்குலத்தை மீட்க
    [வந்தாய்
மறு வுலகில் நீர் எமக்காய்
  மனுப் பேசிக் காப்பீரே


## தேவை

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் விவசாய இரசாயனப் பொருட்கள், இயந்திர உதிரிப்பாகங்கள் மோட்டார் வான்மூலம் விநியோகிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆட்கள் தேவை. ரொக்கப் பிணை ரூ. 5000மும் இரண்டு பொறுப்பாளரின் உத்தரவாதமும் வேண்டும். மாதாந்த சம்பளம் ரூபா 150. கொம்மிஷனையும் சேர்த்தால் இத்தொகை ஏறக்குறைய மாதாந்தம் ரூபா 600-க்கு மேலாகும். சம்பந்தப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பக்காரர் விரும்பப்படுவர்.

பின்வரும் முகவரிக்கு எழுதுக:

**AUTOS LTD.,**
**JAFFNA.**


✠

**திரு. பி. பி. மத்தியூஸ்**
(ஆங்கில ஆசிரியர்)
பரமபதமடைந்த

## 1-ம் வருட ஞாபகம்

**மறைவு: 29-5-70**

ஓராண்டும் நிறைந்தனவே
  உந்தன் முகங்காணுமல்,
தீராதகவலை உமை
  நினைத்தவுடன் எக்காலும்,
பாலகர் மூவருடன் நின்
  அருமை மனைவியும் தான்,
பதறுகிறேன் புலம்புகிறேன்
  பாரினிலே எம்முடனே,
துடிக்கின்றார் நினதன்புச்
  சோதரரும் இனத்தோரும்,
இமைப்பொழுதும் எம்நெஞ்சில்
  நீங்காத இடம்பெற்றாய்.
பல்லாண்டு உம்முடனே
  வாழ்ந்திடாப் பாவியானோம்,
என் செய்வோம் என்தலைவா!
  என்றென்றும் உந்தனுக்கு,
நித்திய இளைப்பாற்றியும்
  முடிவில்லாத ஒளியையுமே,
தந்திடவே இறைஞ்சுகிறோம்
  எக்காலும் இறைவனையே.

இவரது ஆன்ம சாந்திக்காக, 29-5-71 காலை பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் துக்கப்பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதனைக் கண்ணுறும் வண. குருக்கள், சந்நியாசிகள், கன்னியர்கள், விசுவாசிகள் அனைவரும் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை இரந்துவேண்டும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:

மனைவி: வைலற் மத்தியூஸ்
மகன்: குயின்ரஸ்
மகள்: ஜஸ்மின்
மகள்: யூடித் ஐராங்கனி
தாய்: சலோமை
சகோதரர்: வண. பே.ப.பிலிப், O.M.I., அன்ரனி, செபஸ்ரியன், பிறின்ஸ்.
மாமா: ராசேந்திரம் குடும்பம், கயித்தாம்பிள்ளை குடும்பம்,

பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

## தலையங்கம்

கொழும்புத் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதி பெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்ய வேண்டியிருப்பதாலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் எங்கள் பத்திரிகை அதிகாரியின் அங்கிகாரத்தை உரியநேரத்தில் பெறுவது இயலாமையாலும் சில தினங்களுக்கு ஆசிரியத் தலையங்கங்கள் வெளிவரமாட்டது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## சத்தியவேத பாதுகாவலன்

# இல்லமே கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டில்

"ஒரு நல்ல குடும்பம் சிறந்ததொரு பல்கலைக் கழகம்" என்றார் ஒரு பெரியார். அவர் கூற்று முக்காலும் உண்மை. மானிட சமுதாயத்தின் கலமாகவும், புதிய உயிர்கள் அரும்பி மலரும் சோலையாகவும் விளங்குவது குடும்பம், ஒப்பற்ற தேவதிரவிய அனுமானமொன்றினால் நிறுவப்பட்டு திருச்சபையின் உறவுக்கு அடிப்படையாக இயங்குவது. கணவன் மனைவி அன்பு, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையிலுள்ள பந்தபாசம், திருச்சபைக்கும் கிறிஸ்துநாதருக்கும் இடையிலுள்ள உறவை உருவகித்துக் காட்டுவதாகும். குடும்ப உறவின் மூலமே சமுதாய அடிப்படையினை அமைப்பது இறைவனின் ஏற்பாடு. பிள்ளைகளைப்பெற்று அவர்களை உருவாக்கும் வேலைக்கிரமத்தில் பிரதான பங்கு குடும்பத்தினுடையது. ஒரு மனிதனை உருவாக்குவதில் அவனது ஆசிரியர், நண்பர், அயலவர், வாழும் சூழல், பொருளாதாரநிலை என்ற எத்தனையோ ஏதுக்கள் பங்குகொண்டாலும் அவனது குடும்பம் எடுத்துக்கொண்ட பங்குக்கு அவை இணையாகா.

வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்தில் குழந்தையின் வாழ்க்கையை முழுதும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் குடும்பம் தனது பண்புகளை அக்குழந்தைக்கு ஊட்டிக்கொண்டேயிருக்கின்றது. அவை நல்ல பண்புகளா தீய பண்புகளா என்பது பெற்றோரைப் பொறுத்ததாகும். இவ்விதம் மனிதப்பண்புகளை அரும்பச் செய்வது பெற்றோர் அனைவரினதும் கடமை. ஆனால் கிறிஸ்தவப் பெற்றோருக்கு அதைவிட மேலான ஒரு கடமை உண்டு. தம் குழந்தைகளை அறிவிலும், ஒழுக்கத்திலும் மேம்பட்டவர்களாக மட்டுமன்றி சிறந்த கிறிஸ்தவர்களாகவும் உருவாக்கும் கடமை அவர்களுக்குண்டு. அவர்களின் குழந்தைகள் நாட்டின் சிறந்த பிரசைகளாக மட்டுமன்றி கிறிஸ்துவின் இராச்சியத்திற் சிறந்த பிரசைகளாகவும் விளங்க வேண்டியவர்கள். அதற்குரிய அறிவும் பண்பும் அவர்களுள்ளத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

கடந்த காலத்தில் இப்பணியில் ஒருபெரும் பகுதியை பாடசாலைகள் பூர்த்தி செய்து வந்தன. இன்று அந்நிலை மாறிவிட்டது. பெற்றோர் தம் கடமைகளை முற்றும் கையேற்று நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஒரு குழந்தைக்கு அறிவை வேண்டுமானால் வேறொருவர் ஊட்டலாம். ஆனால், பண்புகளைப் பெற்றோர்தான் ஊட்ட வேண்டும். போதிய நேரத்தை தம்பிள்ளைகளோடு கழித்து அவர்களது இன்பதுன்பங்களில் பங்கெடுத்து செபத்திலும் வேலையிலும், அயலவர்களிலும் மட்டுமல்ல, விளையாட்டிலும், சுதந்திரத்திலும், உடை அலங்காரத்திலும் எவ்விதம் கிறிஸ்தவ பண்புள்ளோராய் இருப்பது என்பதை உணர்த்த வேண்டும். இவ்வளவு பாரதூரமான கடமைகளைப் பொறுப்பேற்கும் தகுதி தமக்கில்லை என்பதை அநேக பெற்றோர் உணர்வர். தமது குறையை உணர்வதே அதைத் திருத்துவதற்கு வழி. கிறிஸ்தவ உருவாக்கலில் இப்பெற்றோருக்கு பயிற்சி அளிப்பதற்கு ஏதாவது ஒருவழி தேடவேண்டும். விசாரணைப்பங்கு தோறும் கிறிஸ்த குடும்ப இயக்கங்கள், பெற்றோர் சங்கங்கள் நிறுவுவது இதற்கு பெரிதும் துணை புரியும். துறவறக் கன்னியரின் உதவியும் பொது நிலையினரின் சேவையும் இந்த இயக்கங்களை வலுப்படுத்தத் துணை புரியும்.

## பரி. தந்தையின் விண்ணப்பம்

உலகின் பலகண்டங்களிலும் உள்ள தேவதாயாரின் விசேஷ புனிதஸ்தல அதிபர்களுக்குப் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் சென்றமாதம் அனுப்பியிருந்த விண்ணப்பத்தில் உலகைத் துன்புறுத்தும் பல இன்னல்களும் தீர தேவனின் பிள்ளைகள் தேவ தாயாரில் மேலும் மேலும் அன்பு நிறைந்தவர்களாக விளங்க அவரது பெயரால் விளங்கும் புனித தலங்கள் உதவிபுரிய வேண்டுமெனக் குறிப்பிட்டிருக்கின்றார். இப்புனித தலங்களின் உதவியினால் மனுக்குலம் தேவதாயாரின் மகிமையைத் தெளிவாக அறியவரவேண்டுமென்பதே பாப்பரசரின் நோக்கம். தேவனது ஒளியில் அதிபிரகாசம் பெற்றிருக்கும் அவரது தாயாரின் சிறப்புக்களை மனிதர் தெளிவாக அறிவார்களாயின் உலகின் இன்னல்கள் மறையும் என தந்தைவிளக்கியுள்ளார்.

## வண. அகஸ்ரின், O. M. I. சுவாமியவர்களின் குருத்துவ வெண் பொன் யூபிலி

யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் மூதிய குருப்பிரசாதிகளில் ஒருவரும், சிறந்த பிரசங்கியாரும், யாவரின் அன்புக்கும், மதிப்புக்குமுரியவருமான வண. எல்.ஜே. அகஸ்ரின், ஓ. எம். ஐ. சுவாமியார் நிகழும் ஆனி 13ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை தமது குருத்துவ வெண் பொன் யூபிலியைக் கண்டுகளிக்கவிருக்கிறார். அன்று காலை ஊர்காவற்றுறை, அர்ச். அந்தோனியார் கோவிலிலும், மறுநாள் 14-ம்தேதி காலை ஊர்காவற்றுறை அர்ச். மரியம்மாள் கோவிலிலும் திருப்பலி ஒப்புக்கொடுப்பார். இச் சுப தருணத்தில் யூபிலிநாயகர்மூலமாகக் கடந்த 50வருடங்கள் எங்கள்மேல் பொழிந்த எண்ணுக்கடங்கா வரப்பிரசாதங்களுக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவதோடு, யூபிலிநாயகர் இன்னும் நீண்ட காலத்துக்கு எங்கள் மத்தியில் தொண்டுபுரிய வேண்டிய சுகபெலத்தை அவருக்குத் தேவன் அளிக்கவேண்டுமெனவும் மன்றாடுவோமாக.

## போலாந்து-வத்திக்கான் உறவு

சென்ற வருடம் போலாந்து தேச முன்னாள் தலைவர் கொமியூல்கோ அவர்கள் அரசாங்கத் தலைமையிலிருந்து நீங்கியதன்பின் படிப்படியாக அத்தேச இந்நாள் அரசாங்கம் வத்திக்கானுடன் சிநேகபானமையில முன்னேறி வருகின்றது. சென்ற வாரம் வத்திக்கான் அரசாங்க உயர் பிரதிநிதிகள் இருவர் வத்திக்கானுக்குச் சென்று அங்கு 4 நாட்களாக பல கருமங்களையும் பற்றி வத்திக்கான் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து சுயநாடு திரும்பியிருக்கின்றனர். பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் இந்த அதிகாரிகளை நேரில் சந்தியாவிடினும், போலாந்து தேச மேற்றிராணிமார் சபைச் செயலாளர் மூலமாக சகல கருமங்களையும் தேற விசாரித்து வருகின்றார்.

## 60 வருடமாக பூசைப்பரிசாரகர்

ஸ்கொத்திலாந்து தேசத்தில் எடின்பரோ நகரத்தில் சென் மேரிஸ் மகாதேவாலயத்தில் 60 வருட காலமாக பூசைப்பரிசாரகராகச் சேவை செய்துவந்த 74 வயது நிரம்பிய இளைஞர் திரு. தொமஸ் மக்குவிலன் என்பவருக்கு பரிசுத்த தந்தை விசேஷ புனித பதக்கம் அளித்து கௌரவித்திருக்கின்றார்: பரிசுத்த தந்தையின் அன்பளிப்பை அவர் சார்பாக திரு. மக்குவிலன் அவர்களுக்கு எடின்பரோ நகர அதிமேற்றிராணியாராகிய கருதினால் கிரே அடிகளாரே கொடுத்தருளினார். அத்தருணம் கருதினால் கிரே அடிகள் ஆற்றிய சொற்பொழிவில் திரு. மக்குவிலன் செய்த திருத்தொண்டைத் தாம் நன்கு அறிந்திருப்பதாகக் கூறி அதற்குக் காரணமும் எடுத்துரைத்தார். கருதினால் கிரே உறுதிப்பூசுதல் பெற்றபொழுதும், குருவானவராய் அபிஷேகம் செய்யப்பட்டபோதும், அதிமேற்றிராணியார் பட்டம் அளிக்கப்பட்டபோதும், கருதினாலாய் எடின்பரோ நகரத்துக்கு மீண்டு வந்தபோதும் திரு. மக்குவிலன் திருப்பீடத் தொண்டுகளில் பங்குபற்றிக் கொண்டார்.

## பூசை வழிகாட்டி
### ஆனி — 1971

6. ஞாயிறு — பரி.தமதிரித்துவத்தின் விழா [வெ]
1ஆம் வாசகம்: பழமொழி 8: 22—31
2ஆம் வாசகம்: உரோமர் 5: 1—5
சுவிசேஷம்: அரு. 16: 12—15

7. திங்கள் — நாள்பூசை [ப]
வாசகம்: 2கொரி. 1: 1—7
சுவிசேஷம்: மத். 5: 1—12

8. செவ்வாய் — நாள் பூசை [ப]
வாசகம்: 2கொரி. 1: 18—22
சுவிசேஷம்: மத். 5: 13—16

9. புதன் — நாள் பூசை [ப]
(அ) புனித ஸ்கோத்தியா [வெ]
வாசகம்: 2கொரி. 3: 4—11
சுவிசேஷம்: மத். 5: 17—19

10. வியாழன் — நாள் பூசை [ப]
வாசகம்: 2கொரி. 3: 15—4: 1, 3—6
சுவிசேஷம்:

11. வெள்ளி புனித பர்னபாஸ் [சி]
வாசகம்: அப். பணி 11: 21—26, 13: 1—3
சுவிசேஷம்: மத். 10: 7—13

12. சனி — நாள் பூசை [ப]
வாசகம்: 2கொரி. 5: 14—21
சுவிசேஷம்: மத். 5: 33—37

## ஐம்பதுவருடம் பூர்த்தியானது

1921 ஆம் ஆண்டிலிருந்து தொடர்பாக 42 ஆண்டுகளாக பாதுகாவலன் ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறியவரும், இளைப்பாறியபின்பும் காவலனுக்கு விடயதானங்கள் வழங்கி அதன் வளர்ச்சிக்கு அயராதுழைத்து வருபவருமான திரு. எ.ஞானப்பிரகாசம் அவர்களின் 50 வருட எழுத்துலகின் சேவை இன்று பூர்த்தியாகிறது. தமது நீண்டகால அரும்பெரும் புனித சேவைக்காக பாப்பரசரிடமிருந்து "புரோ எக்கிளேசியா எற் பொன்ரிவிச்சே" (Pro Ecclesia et Pontifice) எனும் மகிமை விருது சன்மானிக்கப்பெற்ற இவர் இன்னும் திடகாத்திரமும், சுறு சுறுப்புடனும் விளங்குகிறார். மேலும் இவர் காவலன் வளர்ச்சிக்கு தொடர்ந்து சேவையாற்ற எல்லாம் வல்லவல்லதேவன் அன்னாருக்கு நீடிய ஆயுளையும் நிறைவான சுகபெலத்தையும்அருள்வாராக. இத்தருணத்தில் காவலன் தனது நல் வாழ்த்துதலை நல்கி நிற்கின்றான்.

## பத்திரிகைக் கட்டுப்பாடு

அவசரகால நிலைமை சம்பந்தமான செய்திகள், கட்டுரைகள், மற்றும் ஆசிரியவசனங்களும் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியைப் பெற்றுத்தான் வெளியிடப்பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் கட்டுப்பாடாகும். இதனை மீறிநடக்கும் எந்தவொரு பத்திரிகை ஸ்தாபனத்தையும்; அச்சகத்தையும் மூடிவிடுவதற்கு அன்றேல் சுவீகரித்துக் கொள்வதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விசேட அதிகாரம் ஒன்று இப்போது மகாதேசாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது. ஒருமுறைக்குப் பலமுறை எச்சரித்தபின்னரே அவர் இந்தஅதிகாரத்தைப் பிரயோகிப்பார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆனி மாதம் 5-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக்பிறஸ்," யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876.